[11th March 1960

(ஆ) எத்தனை ரூபாய் மதிப்புள்ள பட்டைகள் அந்நிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன ?

(இ) மேற்கண்ட பட்டைகள் கிடைக்கக்கூடிய மரங்களை உற்பத்தி செய்வதற்காக அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The trees with barks used in tanning industry are grown in Ramanathapuram, Madurai, Tiruchirappalli, Salem, Coimbatore and the Nilgiris districts.

(*b*) About 25 lakhs of rupees worth of barks are being imported from foreign countries every year.

(*c*) The Government have taken steps to increase the growth of wattle on the Nilgiris and Kodaikanal hills.

SRI P. G. MANICKAM : கனம் அமைச்சர் குறிப்பிட்ட இடங்களில் எத்தனை ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மரங்கள் வைத்து வளர்க்கப்படுகின்றன ? இந்த மரங்களை இன்னும் அதிகமாக வைத்து வளர்ப்பதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

MR. SPEAKER : இது சம்பந்தமாக நேற்று கனம் நிதி அமைச்சர் தமது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிறாரே.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வியை கனம் விவசாய மந்திரியிடம் போடவேண்டும்.

MR. SPEAKER : I think the Hon. Minister in his Budget speech yesterday stated how many acres of wattle are being grown. Did he not?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI A. A. RASHEED : What is the total quantity of wattle bark available in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not possible to estimate what is available in the State. The requirements of the country as a whole have been calculated and the deficit is imported.

Beedi industry

* 298 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the decisions finally arrived at the Conference of the representatives of the managements of the Beedi Industry?

THE HON. SRI R. VENKATARAMAN : The Conference was only held by the Commissioner of Labour to ascertain what arrangements the employers were making to take out licences and to conform to the other provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958. No decisions were taken at the Conference.

11th March 1960]

SRI S. PAKKIRISAMI PILLAI : சட்டத்தின் பயனைத் தொழிலாளிகள் அனுபவிப்பதன் பொருட்டு இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதை இன்னும் ஆறு மாத காலத்திற்குத் தள்ளிவைத்திருக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN இப்போதே இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் பீடித் தொழிலே மூடிவிடப்போவதாக பீடித்தொழில் முதலாளிகள் எல்லோரிடத்திலும் எச்சரிக்கை செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும், இவர்கள் அண்டையிலுள்ள ராஜ்யங்களுக்குச் சென்று அங்கு தொழில் நடத்த முயற்சி செய்கிறார்கள். பீடித் தொழிலில் பெரிய இயந்திரங்கள் போன்றவை இல்லாமலிருப்பதால் அவ்வாறு செய்வது சுலபமாக இருக்கிறது. குடிசையை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தூக்கிச்செல்வது சுலபமாக இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து, எல்லா ராஜ்யங்களிலும் ஒரேமாதிரியான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தென் பிராந்திய தொழில் மந்திரிகள் மகாநாட்டில், ஆந்திரா, கேரளம், மைசூர் ஆகிய ராஜ்யங்களின் மந்திரிகள் தங்கள் தங்கள் ராஜ்யத்தில் இதேமாதிரியான சட்டத்தை இயற்றப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த ராஜ்யங்களில் சட்டம் இயற்றப்படும் வரையிலும் நாம் மெதுவாகப் போவதுதான் நல்லது.

MR. SPEAKER : Why should we not take up the next question also which is on the same subject?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. I will answer the question.

* 299 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for not implementing the provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958?

THE HON. SRI R. VENKATARAMAN : In view of the fact that Andhra, Kerala and Mysore Governments have not yet introduced legislation similar to the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 this Government have postponed the date of coming into force of the licensing provision of the Act to 1st July 1960. As regards the rest of the provisions of the Act, notifications were already issued fixing 1st January 1960 as the date for coming into force of sections 10, 12, 13, 14, 15 and 16 of the Act and 1st July 1959 for the remaining sections. But these sections could not be enforced from the notified dates due to the stay order of the High Court on the writ petitions filed by certain owners of beedi manufacturing premises questioning the validity of the provisions of the Act.

SRI M. KALYANASUNDARAM : ஹைகோர்ட் தீர்ப்பு இப்போது வெளிவந்து விட்டது. இந்தச் சட்டத்தின் முக்கியமான பகுதியே செல்லத்தக்கது அல்ல என்று ஹைகோர்ட் தீர்ப்பு வந்திருப்பதால் இந்தத் தீர்ப்பை அனுசரித்து இந்தச் சட்டத்தைத் திருத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?